சட்டக் கல்வியை கல்வித் துறையிலிருந்து சட்டத் துறைக்கு மாற்றுவது குறித்து வந்துள்ள கோரிக்கை.

484 * (வினா எண் 21378) திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டக் கல்வியை, கல்வித் துறையிலிருந்து சட்டத் துறைக்கு (Ministry of Law) மாற்றுவது குறித்து கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) இப்போது உள்ளபடியே சட்டக் கல்வி, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் கீழேயே இருக்கலாம் என்றும், தற்போதுள்ள நிலைமையில் மாற்றம் செய்யத் தேவையில்லை என்றும் அரசு முடிவெடுத்துள்ளது.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. சட்டக் கல்வியைக் கல்வித் துறையிலிருந்து சட்டத் துறைக்கு மாற்ற வேண்டுமென்று நீண்ட நாட்களாக சட்டக் கல்வி பயிலுகின்றவர்கள் கோரி வருகிறார்களே, அதை மறு பரிசிலனை செய்து, இனிமேலாவது அம்மாதிரி ஒரு துறையை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, சட்டத்துறை என்பது சட்டங்களை உருவாக்குவதும், அது சம்பந்தமான வேலைகளைச் செய்து வருவதுமாகும். சட்டக் கல்லூரி என்பது, மாணவர்கள், ஆசிரியர்கள் கல்வி முறை சம்பந்தமானது. ஆகவே, கல்வித் துறையில் இருப்பதுதான் நல்லது என்று கருதி. எப்பொழுதும்போல, இதுவரையில் இருந்ததைப்போல தொடர்ந்து இருக்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, சட்டக் கல்வி பயிலுகின்ற மாணவன் பொதுவாக அரசிடம் வேலை கேட்பதில்லை. தங்களுடைய திறமைக்குத் தகுந்தாற்போல் பிழைத்துக் கொள்கிறார்கள். எனவே, சட்டக் கல்லூரியை மேலும் அதிகமாக உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் மாவட்டந்தோறும் சட்டக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

1984 மார்ச் 28]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, அப்படியொரு திட்டம் அரசிடம் இப்பொழுது இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தனியார் துறை மூலம் சட்டக் கல்வி அமைப்பதற்கு அரசுக்குக் கோரிக்கை வந்திருக்கிறதா ? தனியார் துறையில் சட்டக் கல்லூரி அமைப்பதற்கு அனுமதி கோரி அரசுக்கு மனு வந்துள்ளதா ? அப்படி வந்தன என்றால், எத்தனை மனுக்கள் வந்தன ? அல்லது இப்படிப் புதிய முறையில் சட்டக் கல்லூரியைத் தோற்றுவிக்க வேண்டாமென்ற கருத்து அரசிற்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, நாம் யாருக்கும் அனுமதி தரவில்லை. ஆனால், சேலத்தில் ஒருவர் ஒரு கல்லூரியை அமைப்பதற்கு உயர்நீதி மன்றத்தின் மூலம் அனுமதி பெறப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் பூங்குளம் என்னுமிடத்திலுள்ள நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாகக் கோரி வந்துள்ள மனு.

485 (*வினா எண் 21636) திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பூங்குளம் என்னுமிடத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க அரசிடம் மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (அ) 1982-83 மற்றும் 1983-84 இல் இப்பள்ளியை ஓர் அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த கோரிக்கை மனுக்கள் வந்தன. ஆனால் உயர்மட்டக் குழு இக் கோரிக்கையை ஏற்க பரிந்துரை செய்யவில்லை.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்கவேண்டுமென்பதற்காக, இரண்டாண்டுகளுக்கு முன் செலுத்த வேண்டிய பணம் முழுவதையும் செலுத்தியாகிவிட்டது. எல்லாத் தகுதிகளும் இருந்தும் ஏன் அதை உயர்நிலைப் பள்ளியாக ஆக்கவில்லை என்று அரசு அறிவிக்குமா ?